# பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06.

**ந.க.எண் 74086 / சி3 / இ1/2019 நாள். 28.01.2019**

பொருள் : பள்ளிக்கல்வி - JACTO-GEO போராட்டத்தில் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பணிக்குத் திரும்பாததால் - மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களை ஒரு மாத காலத்திற்கு மட்டும் முற்றிலும் தற்காலிகமாக ரூ.10,000/- தொகுப்பூதியத்தில் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் அப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் பணியமர்த்துதல் – சார்ந்து.

----------------

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க கூட்டமைப்பினர் JACTO-GEO 22.01.2019 முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் செயல்பாட்டிலும், மாணவர்கள் ஆண்டு இறுதித் தேர்வுக்கு தயாராவதிலும் தொய்வு ஏற்படும் சூழல் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்திற் கொண்டும், மாணவர்களின் ஆண்டு இறுதித் தேர்வினைக் கருத்திற் கொண்டும், ஓய்வு பெற்ற முதுகலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் மற்றும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் / முதுகலை ஆசிரியர் பதவிக்கான கல்வித் தகுதிகளுடன் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் பணி நாடுநர்களைக் கொண்டு முற்றிலும் தற்காலிக அடிப்படையில், போராட்டத்தினால் முற்றிலும் ஆசிரியர் வருகையின்றி உள்ள பள்ளிகளுக்கு தலா ஒரு ஆசிரியர் வீதம் ஒரு மாதத்திற்கு ரூபாய் 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தொகுப்பூதியத்தில் கீழ்க்கண்ட நெறிமுறைகளை பின்பற்றி பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் பணியமர்த்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொகுப்பூதிய நியமனங்கள் அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு மேற்கொள்ளப்படவேண்டும்.

**<u>பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள்</u>**

1) பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் நபர்கள் அந்தந்த பணியிடத்திற்குரிய கல்வித் தகுதியுடன் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில்

பணியமர்த்தப்படும் நபர்கள் அந்தந்த பணியிடத்திற்குரிய கல்வித் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

2) அந்தந்த பள்ளிகளுக்கு அருகாமையில் உள்ள குடியிருப்புகளை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து பணியமர்த்தலாம்.
3) மாணவர் எண்ணிக்கை அதிகமுள்ள பள்ளிகளில் தற்காலிக ஆசிரியர்களைப் பணியமர்த்த முன்னுரிமை வழங்க வேண்டும்.
4) பள்ளிகளுக்கு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு அப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பணியமர்த்தும் ஆணைகளை முதன்மைக் கல்வி அலுவலர் இசைவுடன் வழங்க வேண்டும்.
5) பணியமர்த்தும் ஆணையில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஒரு மாதத்திற்கு ரூபாய் 10,000/- தொகுப்பூதியம் மட்டுமே வழங்கப்படும் என்ற விவரம் குறிப்பிடப்பட வேண்டும்.
6) மேலும் இதனைக் கொண்டு அரசின் வேலைவாய்ப்பிற்கு எத்தகைய உரிமையும்/ முன்னுரிமையும் கோர முடியாது என்ற விவரமும் குறிப்பிடப்பட வேண்டும்.

இணைப்பு – மாதிரி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவரின் ஆணை நகல்.

28/1/19

பள்ளிக்கல்வி இயக்குநர்

.......................... அரசு உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்

தலைவரின் ஆணை

முன்னிலை : திரு./திருமதி. .................................

க.எண். ......... / 2019, நாள். .01.2019

பொருள் : ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தம் – மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு ஊட்டுப் பள்ளிக்கு முற்றிலும் தற்காலிக ஆசிரியரைப் பணியமர்த்துதல் –சார்பு.

பார்வை : 1. அரசுக் கடிதம் எண்.1684/ EE3(1)/2019–2 நாள் 25.01.2019.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 74086/ சி3 / இ1 / 2019, நாள் : 25.01.2019.

*********

ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தினால் அரசு/ நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் இதுகாறும் பணிக்குத் திரும்பாத நிலையில் மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நபரை முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு மாதத்திற்கு மட்டும் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தொகுப்பூதியம் அடிப்படையில் பணியமர்த்தப்படுகிறது.

| வ. எண் | தற்காலிக ஆசிரியர் பெயர் | பணியமர்த்தப்படு அரசு/ நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளியின் பெயர் | பணியமர்த்தப்படும் பதவி |
|---|---|---|---|
| | | | |

**நிபந்தனைகள்**

1. பணியமர்த்தப்பட்ட ஆசிரியர் ............ அன்று காலை 09.00 மணிக்குள் சம்மந்தப்பட்ட பள்ளியில் பணியேற்க வேண்டும்.
2. இந்த ஆணை முற்றிலும் தற்காலிகமானது. இதனைக் கொண்டு அரசின் வேலை வாய்ப்பிற்கு எத்தகைய உரிமையும் / முன்னுரிமையும் கோர முடியாது.
3. அரசால் அறிவிக்கப்படும் போது உடனடியாக எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியிலிருந்து விடுவிக்கப்படுவீர்கள்.
4. பணியேற்க வேண்டிய நாள் முதல் தொகுப்பூதியம் கணக்கிட்டு வழங்கப்படும்.

பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்
(பள்ளியின் முத்திரை)

பெறுதல் – சம்மந்தப்பட்ட ஆசிரியர்

நகல் – தலைமையாசிரியர், ............ அரசு/ நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி

நகல் – ........... முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.

நகல் – ........... மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.

நகல் – .......... வட்டாரக்கல்வி அலுவலருக்குத் தகவலுக்காக அன்புடன் அனுப்பப்படுகிறது.